ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2400/14 - 2024 සැප්තැම්බර් මස 04 වැනි බදාදා - 2024.09.04
*2400/14 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

***கிரிபாவ பிரதேச சபை***

*விநோத வரி அறவிடல்*

***1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஒழுங்குவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் உட் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்***

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க விநோத வரி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான விநோத வரி கட்டளைச் சட்டத்தில் அறிவிக்கப்பட்ட விநோத நடவடிக்கைகளுக்காக அறவிடப்படுகின்ற நுழைவுக் கட்டணத்தில் 10% ஆம் விநோத வரியினை விதித்து அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தில் 9(3) ஆம் உட் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் உட் பிரிவின்படி கிரிபாவ பிரதேச சபையின் செயலாளரினால் 2023.10.25 ஆந் திகதி 904 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிட்டு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை வடமேல் மாகாணத்தின் ஆளுநர் நசீர் அஹமட் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்விளைவான ஒழுங்குவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் உட் பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கமைய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அங்கீகரிக்கப்பட்டது என்பதை இதன்மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

**நசீர் அஹமட்,**
வடமேல் மாகாண ஆளுநர்.

1A – PG6853 –05(2024/09

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ஆளுநர் அலுவலகம்,*
*2024, யூலை 12.*

**தீர்மானம்**

*“1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தில் 9(3) ஆம் உட் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத்திற்கான விநோத வரி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் உட் பிரிவினால் கிரிபாவ பிரதேச சபையின் செயலாளர் ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இப்பாகமுவ பிரதேச சபையின் நிருவாக எல்லையினுள் நடாத்திச் செல்லப்படும் உரிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு விநோத நடவடிக்கைக்கு உள் நுழைவதற்காக செய்யப்படும் கட்டணத்தில் நூற்றுக்கு பத்து வீதத்திற்கு (10%) சமமான வரியினை விதித்து அறவிட வேண்டும் என்றும், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்விளைவான ஒழுங்குவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் உட் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய கௌரவ வடமேல் மாகாண ஆளுநர் அவர்களது அங்கீகாரத்துடன் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும். முன் கூறிய வர்த்தமானியில் வெளியிடப்படும் மாதத்தை தொடர்ந்து அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வர வேண்டும் என்றும் நான் தீர்மானிக்கின்றேன்.”*

EOG 09 - 0032

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*